வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. **30/2025**

எனது இல. **NP/07/10/01/197**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2025.08.29

செயலாளர்,
கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

பணிப்பாளர்,
விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2025

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25 இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் NP/03/02/GA/10/SO/CA இலக்க 2025.07.25ம் திகதிய கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண பொதுச்சேவையின் **மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு** காணப்படும் **மூன்று (03)** வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டு பயிற்றுநர் பதவியில் கடமையாற்றுபவர்கள் மட்டும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலமே இவ் ஆட்சேர்ப்பானது மேற்கொள்ளப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2025ம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025.09.15** ஆகும்.

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு 2016.09.26ம் திகதி முதல் செயல்வலுவிலுள்ள வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள விளையாட்டுத் துறைசார் உத்தியோகத்தர் இணைந்த சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் **மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு** நியமிக்கப்படுவர்.

02.2 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.3 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.4 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **10/2025** க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 7 - 2025** க்கு ஏற்ப **மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்** பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. **71,240 - 11 x 1,360 - 18 x 1,850 - 119,500/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 04. தகைமைகள் :-

### 04.1 கல்வி, தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் :-

வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டு பயிற்றுநர் பதவியில் 08 வருடங்கள் முனைப்பானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த விளையாட்டுப் பயிற்றுநர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

### 04.2 உடற்தகைமை :-

வடக்கு மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

### 04.3 ஏனைய தகைமைகள் :-

i. ஆட்சேர்ப்புக்கான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான 05 வருடங்களுக்குள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
ii. உரிய காலத்தில் உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
iii. உரிய மட்டத்தில் அரசகரும மொழித் தேர்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பம் கோரும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைவாக விதித்துரைக்கப்பட்ட முடிவுத் திகதியில் இப் பிரிவு 04 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 05. பொதுவான தகைமைகள் :-

05.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

05.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பு என்பதால் **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப் பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும், **மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்** பதவிக்குள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை கவனத்தில் எடுத்து ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆட்சேர்ப்பின்போது அல்லது ஆட்சேர்ப்பின் பின்னர் தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் யாவும் இரத்துச் செய்யப்படும்.

எவ்வாறயினும் நியமனத் திகதியானது, நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

## 07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“NP/07/10/01/197”** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

07.3 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத்தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் சிபார்சு செய்யாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07.4 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப் பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகத் தேர்விற்கான கடிதம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

07.5 உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர்.

07.6 விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்களும் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

## 9. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின்போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பப் படிவத்தில் **தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக மட்டுமே தமது கையயொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | புள்ளியிடல் திட்டம் | உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. மேலதிக சேவை அனுபவம் | | | | |
| 01.1 | சேவைமூப்பு: பயிற்றுநர் நியமனத்தில் எட்டு (08) வருட திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையின் பின்னரான சேவை மூப்பு | | 20 | 30 |
| | வருடத்திற்கு | 03 புள்ளிகள் | | |
| | 06 மாதத்திற்கு மேல் | 01 புள்ளி | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 01.2 | **மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவியின் கடமைகளை ஆற்றிய அனுபவம்** : பயிற்றுநர் நியமனத்தின் பின்னர் ஆற்றப்பட்ட காலத்திற்கானது | | 10 | |
| | வருடத்திற்கு | 02 புள்ளிகள் | | |
| | 06 மாதத்திற்கு மேல் | 01 புள்ளி | | |
| **02.** | **துறைசார் மேலதிக கல்வித் தகைமைகள்** | | | |
| 02.1 | விளையாட்டுத்துறை சார்பான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு மேலான தகைமை | 15 புள்ளிகள் | 15 | 20 |
| 02.2 | விளையாட்டு நிர்வாகம், விளையாட்டு முகாமைத்துவம் போன்ற விளையாட்டுத் துறை சார்பான பொதுவான கற்கைநெறிகள் - கீழ் வரும் காலப்பகுதிகளில் அடங்கக்கூடிய ஏதேனும் 03 வெவ்வேறான விடயங்களுக்காக புள்ளிகள் வழங்கப்படும் | | 10 | |
| | 06 மாதம் அல்லது அதற்கு மேலானது | 05 புள்ளிகள் | | |
| | 03 மாதம் அல்லது அதற்கு மேலானது | 03 புள்ளிகள் | | |
| | 01 மாதம் அல்லது அதற்கு மேலானது | 02 புள்ளிகள் | | |
| | 03 நாள் அல்லது அதற்கு மேலானது | 01 புள்ளிகள் | | |
| **03.** | **மேலதிக தொழில்சார் தகைமைகள்** | | | |
| 03.1 | பயிற்றுவித்தல் தொடர்பான உயர் கற்கைநெறி ஒன்றிற்காக 06 மாதம் அல்லது அதற்கு மேலானது | 04 புள்ளிகள் | 4 | 15 |
| 03.2 | விளையாட்டு துறையின் மத்தியஸ்தர் / நடுவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற விளையாட்டு போட்டிக் கடமைகளுக்கான ஒன்றிற்கு மேற்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். | 02 புள்ளிகள் | 2 | |
| 03.3 | சர்வதேச, தேசிய, மாகாண மட்ட போட்டிகளில் அல்லது சர்வதேச / தேசிய விளையாட்டு சங்கங்களால் நடாத்தப்படும் சிரேஷ்ட மட்ட மெய்வல்லுநர் போட்களில் மத்தியஸ்தர் / நடுவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றியமை : கீழ்வரும் ஒவ்வொரு மட்ட போட்டிகளிலும் வெவ்வேறான ஆகக்கூடிய 03 விளையாட்டு நிகழ்வுகள் கவனத்தில் கொள்ளலாம். | | 10 | |
| | சர்வதேச மட்ட போட்கள் | 5 x 2 = 10 | | |
| | தேசிய மட்ட போட்கள் | 5 x 1 = 5 | | |
| | மாகாண மட்ட போட்டிகள் | 5 x 0.5 = 2.5 | | |
| | **04. விளையாட்டு பயிற்றுநர் நியமனத்தின் பின்னர் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் (தேசிய விளையாட்டு விழாவில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டுகளிற்கு மட்டும்)** | | | 30 |
| 4.1 | சர்வதேச மட்ட போட்டியில் (பிராந்திய / பொதுநலவாய / உலக கிண்ணம் / ஒலிம்பிக்) வெற்றி பெற்ற தேசிய அணி தொடர்பில் கீழ்வரும் பொறுப்புக்களை ஆற்றியமைக்கானது. | | 20 | |
| 4.2 | இலங்கை விளையாட்டு அமைச்சின் திறந்த தேசிய விளையாட்டு விழா போட்களில் வெற்றி பெற்ற மாகாண அணி தொடர்பில் கீழ்வரும் பொறுப்புக்களை ஆற்றியமைக்கானது | | 15 | |
| 4.3 | இலங்கை தேசிய விளையாட்டு சங்கங்ளினால் நடாத்தப்படும் சிரேஸ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் கீழ் வரும் பொறுப்புக்களை ஆற்றியமைக்கானது | | 5 | |
| 4.4 | மாவட்ட அல்லது மாகாண மட்டத்தில் பயற்றுநரால் ஒழுங்கமைக்கப்பட்ட / மேற்கொள்ளப்பட்ட விசேட முன்னெடுப்புக்கள் | | 5 | |

4.1 – புள்ளிகள் வழங்கப்படும் விதம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| 1. பயிற்றுநர் | 7 | 6 | 5 |
| 2. உதவி பயிற்றுநர் | 4 | 3 | 2 |
| 3. முகாமையாளர் | 2 | 2 | 2 |

4.2 – புள்ளிகள் வழங்கப்படும் விதம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| 1. பயிற்றுநர் | 4 | 3 | 2 |
| 2. உதவி பயிற்றுநர் | 3 | 2 | 1 |
| 3.அணிப்பொறுப்பாளர்/முகாமையாளர் (அணி குழுவிற்காக) | 1 | 1 | 0.5 |

4.3 – புள்ளிகள் வழங்கப்படும் விதம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| 1. பயிற்றுநர் | 3 | 2 | 1 |
| 2. உதவி பயிற்றுநர் | 2 | 1 | 0.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டு வழங்கப்படும் புள்ளி | ஒவ்வொரு வகுதியிலும் கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்கூடிய செயற்பாடுகளின் எண்ணிக்கை | | |
| | *1.* பயிற்சி முகாம்கள் (Coaching Camps) | *0.5* | *4* | | |
| | *2.* பயிற்சிப் பட்டறைகள் | *0.5* | *2* | | |
| | *3.* விசேட விளையாட்டு போட்டிகள் | *0.5* | *2* | | |
| | *4.* விளையாட்டுத்துறை ஆக்கங்கள் | *0.5* | *2* | | |
| ***4.5*** | நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்பட்ட ஆளுமை, தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள் | | | ***5*** | ***05*** |
| | **மொத்தம்** | | | | ***100*** |

**கவனிக்கவும்:-**

(i) இச் சுற்றறிக்கை மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் *021 221 9939* என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iii) இவ்வறிவித்தலை தங்களது அமைச்சு / திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் தகைமையுள்ள சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

(iv) இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2025.08.29*